REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04)



# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

FILM - 21 CLICK - 01
APRIL 2025 ₹. 1

## அறிவிப்பு

60 வயதுக்கு உட்பட்டவர்கள் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில் இணைந்து குடும்ப பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு

**P. துரைபாபு**
CVPA செயலாளர்




Supported By
Media Partner
PPAI

TAMILNADU VIDEO & PHOTOGRAPHERS ASSOCIATION
REGD.OFF:42, SINGARATHOPE, TRICHY - 620008.
ADMIN OFF : 8C, ANNAI COMPLEX, THIRUVALLUVAR SALAI, DINDIGUL - 624001, TAMILNADU.
For Further Details Con: 94432 01656 / 98421 98850 / 94435 10295
Scan QR to Register to get E-PASs and Become a PARIVAR MEMBER today
POWERED BY FOTOTECH PARIVAR INDIA PVT.LTD

அன்புடன்
சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்
நெ : 48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை - 600 002

# CVPA –ல் இடைவெளி இல்லாத ரெனிவலை செய்யுங்கள் CVPA NNT குழுவில் உடனே இணையுங்கள்

நமது மாநில சங்கம் சார்பாக வரும் மே மாதம் 9 – 10 – 11 ஆகிய மூன்று தேதிகளில் டிஜி மீடியா 2025 எக்ஸ்போ வெகு விமர்சியாக நடைபெற உள்ளது. இதில் நமது சங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று உங்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

நாம் நமது சங்கம் தொடங்கிய காலத்தில் இருந்து சங்கத்திற்கு வருடம் தோறும் செலுத்த வேண்டிய சந்தா தொகையை நினைவில் வைத்துக் கொண்டு சந்தாவை செலுத்துங்கள், என்று ச ங்க உறுப்பினர்களாகிய உங்களிடம் ஒவ்வொரு ஆண்டும் நினைவுபடுத்திக் கொண்டே இருக்கிறோம். ஆனாலும், ஒருவித அலட்சிய போக்கை பல பேரிடம் காண முடிகிறது. இதனால் இவர்களுக்கு, நமது சங்கத்தில் எடுக்கப்படும் சில முக்கிய முடிவுகளுக்கு இவர்கள் தகுதி இழந்தவர்களாக போய்விடுகின்றனர். எனவே, இடைவெளி இல்லாத தொடர்ச்சியானரெனிவலை தொடர்ந்து செய்ய வேண்டும் என்று உங்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

திருநின்றவூர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் ராஜசேகர் அவர்கள் (வயது 56) உடல் நலம் பாதிக்கப்பட்டு இம்மாதம் உயிரிழந்தார். நமது சங்கம் சார்பாக சங்க நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள் ஆகியோருடன் நேரில் செ ன்று அண்ணாருக்கு அஞ்சலி செலுத்தினோம். பிறகு, அவரது குடும்பத்தினரை சந்தித்து ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டோம். நமது சங்க பொதுக்குழு தீர்மானப்படி வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகையை அவரது ரெனிவலை அடிப்படையாகக் கொண்டு 10 ஆயிரம் ரூபாயை அவரது குடும்பத்தாரிடம் வழங்கினோம். ராஜசேகர் அவர்கள் இடைவெளி விட்டு ரினிவல் செய்த காரணத்தால் ஈமச்சடங்கு தொகையை முழுமையாக வழங்க முடியாமல் போனது மன வருத்தத்தை தருகிறது. மேலும் CVPA NNT குழுவிலும் இவர் உறுப்பினராக இணையாமல் போன காரணத்தால், CVPA NNT நிதியை கூட இவரது குடும்பத்திற்கு வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

கொரோனா காலத்தில் வயது வித்தியாசம் இன்றி எத்தனையோ ஒளிப்படக் கலைஞர்கள் உயிரிழந்ததை நாம் கண்கூடாக பார்த்தோம். இதில் நமது சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்களை விட, சங்கத்தில் ரெனிவல் செய்யாதவர்கள், ச ங்கத்தில் சேராதவர்கள் என பெரிய பட்டியல் நீண்டு கொண்டே போனது. ஒரு கலைஞன் உயிரிழந்த பிறகு தான், அந்த குடும்பத்தில் உள்ள பொருளாதார பிரச்சனை பலருக்கும் தெரிய வருகிறது. உயிரிழந்த அந்த கலைஞன் குடும்பத்திற்கு எந்தவித சேமிப்பும் சேர்த்து வைக்காதது இதனால் குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குறியானது, அந்த கலைஞனுக்கு இருந்த கடன் சுமை போன்றவை வெளியே தெரிய வருகின்றன. இந்த சூழ்நிலையில் அவரோடு நெருக்கமாக இருந்த நண்பர்கள் வாட்ஸ்அப் குழுக்கள் மூலமாக பண உதவி கேட்டு கோரிக்கை வைக்கின்றனர். என்னதான் முயற்சி செய்தாலும் ஓரளவு மட்டுமே பணம் கிடைக்கிறது. இது அந்த கலைஞனின் குடும்பத்திற்கு போதுமானதாக இருப்பதில்லை. சில கலைஞர்களுக்கு அந்த உதவி கூட கிடைப்பதில்லை.

இது போன்றதொரு சூழ்நிலையை இனி வரும் காலங்களில் நமது கலைஞர்கள் யாரும் சந்திக்கக் கூடாது என்கிற நல்ல நோக்கத்தில் தான் நமக்கு நாமே என்ற குடும்ப நல பாதுகாப்பு CVPA NNT திட்டத்தை நமது சங்கத்தில் தொடங்கி வைத்திருக்கின்றோம். இத்திட்டத்தில் எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டும் என்கிற நல்ல நோக்கம் கொண்ட ஆயிரம் உறுப்பினர்களை ஒருங்கிணைத்து CVPA NNT திட்டத்தை வலுப்படுத்த முயற்சி எடுத்து வருகிறோம். இதுவரை 657 குடும்பங்கள் CVPA NNT மூலம் பாதுகாக்கப்பட்டுள்ளனர். விரைவில் நம் அனைவரின் முயற்சியால் CVPA NNT திட்டத்தின் மூலம் ஆயிரம் குடும்பங்கள் நிச்சயமாக பாதுகாக்கப்படுவார்கள் என்கிற நம்பிக்கை உள்ளது.

சங்கத்திற்கு செலுத்த வேண்டிய சந்தா தொகையை இடைவெளி விடாமல் தொடர்ச்சியாக செய்யவும். CVPA NNT குழுவில் உடனடியாக சேரவும்.

நம்மை நாமே தேடுவது வாழ்க்கை அல்ல! நமக்கு நாமே உருவாக்கிக் கொள்வது தான் வாழ்க்கை!

இப்படிக்கு
**P. துரைபாபு**
CVPA செயலாளர்

# தமிழ்நாடு வீடியோ - போட்டோகிராபர் அசோசியேசன் (TVPA) நடத்தும் சர்வதேச புகைப்பட தொழில்நுட்ப கண்காட்சி DIGI MEDIA - 2025 வரும் மே 9-10-11 ஆகிய தேதிகளில் சென்னை டிரேட் சென்டரில் நடைபெறுகிறது

## அனுமதி இலவசம்




CVPA உறுப்பினர்களுக்கு வணக்கம்!

நமது மாநில சங்கம் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள டிஜிமீடியா 2025 எக்ஸ்போவை கண்டுகளித்து பயன்பெறுமாறு உங்கள் எல்லோரையும் அன்புடன் அழைக்கிறோம். அனைத்து போட்டோ வீடியோ முன்னணி தயாரிப்பு நிறுவனங்களும் டிஜி மீடியா 2025 எக்ஸ்போவில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளன. மாநிலம் முழுவதிலும் இருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள போட்டோ வீடியோ கலைஞர்கள் எக்ஸ்போவை காண வருகை தர உள்ளனர். 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போட்டோ வீடியோ கலைஞர்கள் இந்த எக்ஸ்போவில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, நமது CVPA உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், அவசியம் டிஜிமீடியா 2025 எக்ஸ்போவில் கலந்து கொள்ள வேண்டும் என்று உங்கள் எல்லோரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறோம். இது நமக்கான எக்ஸ்போ. இதில் ஒவ்வொரு CVPA உறுப்பினரின் வருகையும் மதிப்பு மிக்கதாக கருதப்படுகிறது. தனியார் நடத்தும் எக்ஸ்போவிற்கும், ஒரு சங்கம் நடத்தும் எக்ஸ்போவிற்கும் உள்ள வித்தியாசத்தை வெளிப்படுத்தும் விதத்தில் இந்த எக்ஸ்போ அமைக்கப்படுகிறது.இதை கருத்தில் கொண்டு தான் மாநில சங்கம் பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளை செய்து கொடுத்திருக்கிறது.

வெளியூரில் இருந்து வரும் புகைப்பட சொந்தங்கள் தங்கள் பயண களிப்பு நீங்கிய பின் அனைவரும் குளித்துவிட்டு தயாராகி வர, அவர்களுக்காக இலவசமாக தங்குமிடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.வெளியூரில் இருந்து வரும் கலைஞர்கள் தங்களின் உடமைகளை டிஜிமீடியா 2025 எக்ஸ்போ நடக்கும் டிரேட் சென்டரில் பாதுகாப்பாக வைத்திருக்க Cloak Room வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. டிஜிமீடியா 2025 எஸ்போ நடக்கும் டிரேட் சென்டரில் மொபைல் ATM வசதி செய்யப்பட்டுள்ளது. எக்ஸ்போவில் நாம் வாங்கும் அனைத்து விதமான பொருட்களையும் நமது இடத்திற்கே வந்து சேர்க்கின்ற வகையில் பார்சல் சர்வீஸ் வசதி செய்யப்பட்டுள்ளது. எக்ஸ்போவை சுற்றிப் பார்க்கும் பார்வையாளர்களுக்காக ஆங்காங்கே குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.நமது தொழில்நுட்ப கண்காட்சியில் கலந்து கொள்ளும் அனைத்து மாவட்ட சங்க உறுப்பினர்களுக்கும் தினமும் கட்டணமில்லாத தரமான மதிய உணவுக்கு மட்டும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. டிஜிமீடியா 2025 எக்ஸ்போவில் மூன்று நாட்களும் தலை சிறந்த ஒளிப்பட பயிற்றுனர்களை கொண்டு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நமது கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்காக புகைப்பட போட்டி, குறும்பட போட்டி,போட்டோ வாக், போன்றவை நமது துறையில் அனுபவம் வாய்ந்த நடுவர்களை கொண்டு நடத்தப்பட உள்ளது.

ஒவ்வொரு மாவட்ட சங்கத்திலும் மூன்று மூத்த ஒளிப்பட கலைஞர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு நமது மாநில சங்கம் சார்பாக வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவப்படுத்தும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதைப் போலவே ஒவ்வொரு மாவட்டத்திலும் நமது சங்க உறுப்பினர்களின் மூன்று குழந்தைகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கும் இளம் சாதனையாளர் விருது கொடுத்து மாநில சங்கம் கௌரவப் படுத்துகிறது.

புகைப்படக் கலைஞர்களால் புகைப்படக் கலைஞர்களுக்காக நமக்கு நாமே நடத்தும் போட்டோ வீடியோ கண்காட்சி இதுவாகும். நூற்றுக்கும் மேற்பட்டமுன்னனி தயாரிப்பு நிறுவனங்கள் கலந்துகொள்கின்றார்கள்.

டிஜிமீடியா 2025 எக்ஸ்போவுடன் சேர்ந்து நடக்கும் அனைத்து முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் ஒளிப்பட சொந்தங்களாகிய நீங்கள் அனைவரும் கலந்து கொண்டு CVPA-TVPA க்கு பெருமை சேர்க்குமாறு, உங்களை வருக வருக என்று அன்புடன்

அழைக்கின்றோம்.

இப்படிக்கு
**V.புருஷோத்தமன்,**
CVPA தலைவர்

## வருந்துகிறோம்



வடசென்னை, திருநின்றவூர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் **திரு. அ.ராஜசேகரன்** (வயது 56) அவர்கள் 12.04.25 அன்று இயற்கை எய்தினார். அன்னாரது மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் விதமாக நமது சங்க நிர்வாகிகள், பகுதி செயலாளர் ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள். அன்னாரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு சங்க நிர்வாகிகள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தனர். மேலும்,நமது பொதுக்குழு தீர்மானப்படி மறைந்த சங்க உறுப்பினருக்கு ரெனிவலை அடிப்படையாகக் கொண்டு (இடைவெளி விட்டு ரெனிவல் ) வழங்கப்படும் ஈம சடங்கு தொகை ரூபாய் 10 ஆயிரத்தை அன்னாரது குடும்பத்தினரிடம் சங்க நிர்வாகிகள் வழங்கினார்கள்.

- CVPA

# CVPA NEWS 20-ம் ஆண்டை நிறைவு செய்து 21-ம் ஆண்டில் அடியெடுத்து வைத்தது!

நமது CVPA சங்கம், தனது சங்க உறுப்பினர்களை தொழில் ரீதியாக மேம்படுத்திக் கொள்ளவும், அவ்வப்போது மாறிவரும் தொழில்நுட்ப மாற்றத்திற்கேற்ப, அவர்களை அடுத்த கட்டத்திற்கு தயார்படுத்தி கொள்ள வேண்டும் என்கிற தொலை நோக்கு சிந்தனையில் தொடங்கப்பட்டது தான் நமது CVPA NEWS மாத பத்திரிகை. பொதுவாக ஒரு சங்கம் (குறிப்பாக: போட்டோ வீடியோ சங்கங்கள்) தனது சங்க உறுப்பினர்களுக்காக பத்திரிகை நடத்துவது என்பது சாதாரண விஷயம் கிடையாது. அதுவும் 20 ஆண்டுகளை நிறைவு செய்துவிட்டு இன்று 21 ஆம் ஆண்டில் தனது பயணத்தை CVPA NEWS தொடர்கிறது என்று சொன்னால், இது ஆகச் சிறந்த விஷயமாகவே இன்று எல்லோராலும் பார்க்கப்படுகிறது. அந்த வகையில் 2005 ஆம் ஆண்டு நமது சங்கம் சார்பாக பத்திரிகை நடத்துவதற்கு மத்திய அரசின் கீழ் செயல்பட்டு வரும் Register Of News Papper For India ல் முறையாக விண்ணப்பித்து பத்திரிகை நடத்துவதற்காக பிரேத்யேகமாக RNI நெம்பரை (RNI NO:15261/2005) முறையாக அங்கீகாரம் பெற்றதுடன், நமது சங்க உறுப்பினர்களின் வீட்டு விலாசத்திற்கே CVPA NEWS பத்திரிக்கை சென்றடையும் வகையில் போஸ்ட் ஆபீஸில் அதற்கு உரிய சலுகையும் பெற்று விட்டோம். இது அகில இந்திய அளவில் எந்த ஒரு போட்டோ வீடியோ சங்கமும் தனது சங்க உறுப்பினர்களுக்காக செய்யாத ஒரு செயல் ஆகும். அந்த வகையில் நமது ஒளிப்பட தொழில் துறையில் CVPA NEWS நம்பர் ஒன்னாக திகழ்கிறது . சில சங்கங்கள், நாங்களும் பத்திரிகை நடத்துகிறோம் என்ற பெயரில், பத்திரிகை வெளியிட்டாலும், அவை நூலறிந்த காற்றாடி போல் காணாமல் தான் போனது. இதற்கு நம்மால் பல எடுத்துக் காட்டுகளை கூற முடியும். ஆனால், 21 ஆம் ஆண்டிலும், CVPA NEWS இன்னும் தனது பணியை தொடர்ந்து செய்து கொண்டு தான் இருக்கிறது.

எந்த நோக்கத்திற்காக நமது சங்கம் பத்திரிகையை தொடங்கியதோ, அதை 100% செயல்படுத்தி காட்டிய பெருமை நமது CVPA NEWS பத்திரிகைக்கு நிச்சயம் உண்டு. குறிப்பாக பிலீம் இல்லாத டிஜிட்டல் தொழில்நுட்ப கேமரா வெளிவந்த போது, ஒளிப்பட கலைஞர்கள் எல்லோரும் டிஜிட்டல் கேமராவிற்கு மாற வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர். குழப்பமான அந்த சூழ்நிலையில் டிஜிட்டலுக்கு மாறுவதற்கு தயக்கம் காட்டினார்கள். அந்த சூழ்நிலையில் டிஜிட்டல் கேமரா தொழில்நுட்பம் குறித்து CVPA NEWS பத்திரிகை மூலம் டிஜிட்டல் கேமரா குறித்து தமிழ் கட்டுரைகளை வெளியிட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்த நாம் எடுத்துக் கொண்ட முதல் முயற்சியே வெற்றியில் முடிந்தது. திரு. ராஜா பொன் சிங் அவர்கள் எழுதிய "வெளிச்சம்" தொடர் கட்டுரை நமது கலைஞர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. ராஜா பொன் சிங் அவர்களும் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, டிஜிட்டல் கேமரா குறித்து தமிழில் பயிற்சி வகுப்பு நடத்தி நமது முயற்சிக்கு உறு துணையாக இருந்தார். என்பதை இங்கே நாம் குறிப்பிட்டு ஆக வேண்டும். அவருக்கு இந்த நேரத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது சங்கம் தொடங்கிய அடுத்த இரண்டாவது ஆண்டில் 1998 ஜனவரி மாதத்தில் RNI நெம்பர் இல்லாமலேயே புத்தக வடிவத்தில் நமது சங்கம் சார்பாக முதல் CVPA NEWS -ஐ வெளியிட்டோம். அதனை தொடர்ந்து பத்து மாதங்கள் சென்ற பின் இரண்டாவது இதழை 1998 ஆண்டு நவம்பர் மாதம் வெளியிட்டோம். மீண்டும் 23 மாதங்கள் சென்றபின் 2002 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் மூன்றாவது இதழை வெளியிட்டோம். ஆக மூன்று இதழ்கள் மட்டுமே புத்தக வடிவத்தில் வெளிவந்தன. அன்றைய காலகட்டத்தில் சென்னையில் ஆப்செட் பிரின்டிங் மிஷின் என்பது அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தது. எனவே பிரின்டிங் செய்ய அதிக அளவில் பணம் தேவைப்பட்டது. அதனால் புத்தகத்தை தொடர்ந்து வெளியிட முடியாமல் போனது. இது தவிர அன்றைய பொருளாதார சூழ்நிலையை கருத்தில் கொண்டு CVPA NEWS புத்தக கான்செப்ட்டை முடிவுக்கு கொண்டு வந்தார்கள்.

2005-ம் ஆண்டு மீண்டும் பத்திரிகையை பேப்பர் வடிவத்தில் வெளியிட முடிவு செய்தோம். இம்முறை இந்த பேப்பருக்கு என்ன பெயர் சூட்டலாம் என்று முடிவு செய்தபோது, நாம் ஏற்கனவே பயன்படுத்தி வந்த CVPA NEWS டைட்டிலேயே இந்த பேப்பருக்கும் சூட்டி விடலாம் என்று முடிவு செய்து அதையே RNI -ல் பதிவு செய்தோம். அந்த காலகட்டத்தில் யாரிடமும் எவ்வித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் CVPA NEWS-ஐ தமிழகத்தின் எல்லா பகுதிகளுக்கும்கொண்டு போய் சேர்த்தோம். ஒளிப்பட கலைஞர்கள் மத்தியிலும் வியாபார பெருமக்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பு நமது CVPA NEWS க்கு கிடைத்தது. பஞ்சமே இல்லாமல் விளம்பரங்கள் நம்மை தேடி வந்தன. 24 பக்கம் வரை கூட அச்சிட்டு எல்லோருக்கும் இங்கஅ மீஉங்கு -ஐ அனுப்பி வைத்தோம். கொரோனா காலத்தில் கூட தடையின்றி நமது இங்கஅ மீஉங்கு பத்திரிகை சென்றது.20 ஆண்டுகள் பயணத்தை இனிதே முடித்திருக்கிறோம். இன்றைய காலகட்டத்தில் எல்லோருடைய கவனமும் சமூக ஊடகங்கள் மீது திரும்பி உள்ளது. நாமும் நமது அடுத்த கட்ட நகர்வை நோக்கி செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

இது நாள் வரை நமது பத்திரிகைக்கு ஆதரவு அளித்தவர்களுக்கும், விளம்பரம் கொடுத்து உதவிய வியாபார நிறுவனங்களுக்கும், தமிழில் தொழில்நுட்ப கட்டுரைகள் வழங்கிய தொழில்நுட்ப வல்லுனர்களுக்கும், இது நாள் வரை CVPA NEWS பத்திரிகையின் முன்னேறத்திற்கு பாடுபட்ட அனைத்து சங்க நிர்வாகிகளுக்கும், குறிப்பாக, சோபாஸ் அம்பலம் அவர்கள், ஜெயக்குமார் அவர்கள், துரைபாபு அவர்கள், சரவணன் அவர்கள், பிரேம்குமார் அவர்கள், லட்சுமி நாராயணா அவர்கள், இவர்களுக்கு என் நெஞ்ச ார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயம் நமது CVPANEWS & I RNI நெம்பருடன் வெளிவர முழு முதல் காரணமாக விளங்கிய மறைந்த முன்னாள் செயலாளர் ரவிச்சந்திரன் மற்றும் RNI பதிப்பின் முதல் ஆசிரியர் கஜேந்திரன் ஆகியோருக்கு நமது பத்திரிகையின் வெற்றியை காணிக்கையாக்குகிறோம்.

அன்புடன்
**B. ஸ்ரீதர், ஆசிரியர்**

CVPA NEWS மாத இதழின் முன்னாள் ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், சிறப்பாசிரியர், பொறுப்பாசிரியர், ஆகியோருக்கு நன்றி! நன்றி!!

**முதல் இதழ் வெளியானது**
**1998 - ஜனவரி**
ஆசிரியர் - **சோபாஸ் அம்பலம்**

**உதவி**
R. **சுந்தர வடிவேல்**
E. **ரவிச்சந்திரன்**
R. **ஜெயக்குமார்**
M.K. **சேகர்**
**ஜெய்சங்கர்**

**இரண்டாம் இதழ் வெளியானது**
**1998 - நவம்பர்**

ஆசிரியர்: **சோபாஸ் அம்பலம்**

சிறப்பாசிரியர்: **கலைமாமணி யோகா**

உதவி ஆசிரியர்கள்:
**E. ரவிச்சந்திரன்**
**R. மதுசூதனன்**
**சி. சீனிவாசன்**
**C.G. மோகன் குமார்**

**மூன்றாவது இதழ் வெளியானது:**
**2002 - அக்டோபர்**

பொறுப்பாசிரியர்:
**R. ஜெயக்குமார்**

இணை ஆசிரியர்:
**M. கஜேந்திரன்**

ஆலோசகர்கள்:
**E. ரவிச்சந்திரன்**
**B. ஸ்ரீதர்**

RNI **நெம்பருடன் பேப்பர் வடிவில் வெளியான முதல்** CVPA NEWS

**2005 - மே**

ஆசிரியர்:
**M. கஜேந்திரன்**

பதிப்பாளர்:
**B. ஸ்ரீதர்**

உதவி:
**லட்சுமி நாராயணா**

**2006 - ஆகஸ்ட்**

ஆசிரியர் - பதிப்பாளர்: (இரண்டு பொறுப்புகள்)
**B. ஸ்ரீதர்**










மத்திய சென்னை, பட்டாளம் பகுதியைச் சேர்ந்த, திரு. M. குவைஸ்பாஷா – Q. ஷபானா இவர்களின் குழந்தையின் முதலாம் ஆண்டு பிறந்தநாள் விழா 16.04.25 அன்று நடைபெற்றது. நமது சங்கம் சார்பில் சங்க நிர்வாகிகளும், பகுதி செயலாளர்களும் கலந்துகொண்டு குழந்தையை வாழ்த்தினார்கள்.



தென் சென்னை எஸ்–2, ஆதம்பாக்கம் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் சிவா அவர்களின் புதுமனை புகுவிழாவில் சங்க நிர்வாகிகள், பகுதி செயலாளர் ஆகியோர் நமது சங்கம் சார்பாக கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.



தென் சென்னை, புனித தாமஸ் மவுண்ட் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் காண்டீபன்–பிரபாவதி இவர்களின் திருமணம் விழுப்புரம் மாவட்டம் கோலியனூரில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க தலைவர் புருஷோத்தமன் அவர்கள் சக சங்க உறுப்பினர்களுடன் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351